Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR
Case No.**CC.NO. 249/2025**
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No. 6 Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. மதியழகன் | **தொழில்** | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. ராமன் | **கிராமம்/ ஊர்** | உமராபாத் |
| **வயது** | 55 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 2-4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 06th day of April 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-**

1. நான் தற்போது உமராபாத் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.11.2023 அன்று சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பகல் 13.30 மணிக்கு நிலையம் திரும்பி நிலைய குற்ற எண். 291/2023, இதச பிரிவுகள் 294(b),323,506(2) ன் பதிவு செய்தேன்.**(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் அன்றைய தின மதியம் 14.30 மணிக்கு சம்பவ இடம்

சென்று சாட்சிகள் வெள்ளயங்கிரி மற்றும் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் என்னால் அ.சா.ஆ. 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் புகார்தாரரின் காலி மனையிடம் இருந்து மண்வெட்டி – 1, வெட்டுக்கத்தி – 1 ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். (அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.) பின்னர் வழக்கு சொத்தினை படிவம் –91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(அந்த படிவம் – 91 அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களான **மண்வெட்டி மற்றும் வெட்டுக்கத்தி முறையே அ.சா.பொ 1,2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பை மேற்கொண்டு புலன் விசாரணை செய்வதற்காக உதவி ஆய்வாளர் திரு. விஜய் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். அவர் இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து காயசான்றும் வாக்குமூலமும் பெற்றுள்ளார். (அந்த காயச்சான்று ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது). அவர் பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்த போது என்னிடம் கூறிய விவரங்களையே அவரிடமும் கூறியதால் அவர் புதியதாக வாக்கு மூலம் ஏதும் பதிவு செய்யவில்லை. பின்னர் அவர் தனது இறுதி கட்ட புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b),323,506(2) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

31.10.2023 அன்று காலை 08.00 மணிக்கு சம்பவம் நடைபெற்றது. 31.10.2023 அன்று மாலை வேளையில் மருத்தவமனையில் இருந்து தகவல் கிடைத்தது. நான் மாலை நேரம் நான் மருத்துவமனைக்கு சென்ற போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த எதிரியையும் நான் விசாரித்தேன் என்றால் சரிதான். எதிரிகள் அளித்த புகாரின் பேரில் இவ்வழக்கில் புகார்ததாரின் குடும்பத்தின் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு 01.11.2023 அன்று மதிய வேளையில் சென்றேன். சம்பவயிடம் எதிரிக்கு சொந்தமானது என குறிப்பிட்டுள்ளேன் என்றால்சரிதான். சம்பவத்தின்போது வெள்ளியங்கிரி, வெங்கடேசன், கௌதம் ஆகியோர்

சம்பவயிடத்தில் இருந்தார்கள். அவர்கள் பெரிய வெள்ளக்குட்டையை சேர்ந்தவர்கள். சம்பவயிடத்தை சார்ந்தவர்கள் இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் எனது விசாரணையில் எதிரிகள் தனது மகன் சக்தி பாஸ்கரை தாக்கியதாக கூறவில்லை என்றால் சரிதான். அவரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் மருத்துவரிடம் ஆயுதத்தால் தன்னை எத்தனை நபர்கள் தாக்கியதாக தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகசர்களில் அக்டோபர் மாதம் தயார் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்துக்கள் புகார்தாரருக்கு சொந்தமானது என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார்தாரர்கள் தான் அத்துமீறி நுழைந்தார்கள் என்றாலும், நான் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, இவ்வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்திலேயே வைத்து, தயாரித்து, எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Signature of Witness

Judicial Magistrate No.III(FAC)
Tirupathur.